தினமணி

**உதகை மலர்க் காட்சி நிறைவு**

First Published : 23 May 2011 11:35:05 AM IST

உதகை, மே 22: உதகையில் மூன்று நாள்களாக நடைபெற்ற மலர்க் காட்சி ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது. கடைசி நாளில் 75 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் மலர்க் காட்சியை கண்டு களித்தனர்.

மலைகளின் அரசியான உதகையில் மலர்களுக்கான திருவிழாவாக ஆண்டுதோறும் அரசு தாவரவியல் பூங்காவில் மலர்க் காட்சி நடத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டு வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை 3 நாள்களுக்கு மலர்க் காட்சி நடத்தப்பட்டது.

முதல் நாளில் சுமார் 40 ஆயிரம் பேரும், இரண்டாம் நாளில் சுமார் 60 ஆயிரம் பேரும் மலர்க் காட்சியை ரசித்தனர். கடைசி நாளாக ஞாயிற்றுக்கிழமை 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் கண்டு களித்தனர்.

மக்கள் நெரிசலால் உதகை நகரமே திணறியது. பெரும்பாலான சாலைகள் ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்டிருந்த நிலையில், உள்ளூர் வாகனங்களும், சுற்றுலாப் பயணிகளின் வாகனங்களும் கூட்ட நெரிசலில் சிக்கித் திணறின.

ஞாயிற்றுக்கிழமை மாலையில் அரசு தாவரவியல் பூங்காவில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். சிறந்த மலர்த் தோட்டங்கள் மற்றும் காட்சி அரங்குகளுக்கான பரிசுகளை வழங்கி அவர் பேசியது:

கடந்த ஆண்டு மலர்க் காட்சியை விட நடப்பாண்டில் சுமார் 30 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் கூடுதலாக வந்துள்ளனர். மேலும், மலர்க் காட்சியையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளிலும் ஏராளமானோர் பங்கேற்றுள்ளனர்.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசு தாவரவியல் பூங்காவின் மேம்பாட்டுப் பணிகளுக்காக கூடுதல் நிதி ஒதுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் 4 இடங்களில் வாகன நிறுத்துமிடங்கள் அமைக்க இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதற்கான நில ஆர்ஜிதம் குறித்து அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றார்.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் தீபக் ஸ்ரீவத்சவா, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் ஹால்துரை, மாவட்ட காவல் கூடுதல் கண்காணிப்பாளர் காசிவிஸ்வநாத்,

தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர்கள் பிரகாசம், ராம்சுந்தர், உதகை நகர்மன்றத் தலைவர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விவசாயத்துக்கு மும்முனை மின் விநியோக நேரத்தை அதிகரிக்க வலியுறுத்தல்**

First Published : 23 May 2011 01:46:59 PM IST

புதுக்கோட்டை, மே 22: புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாய இணைப்புகளுக்கு மும்முனை மின்சாரம் விநியோகம் செய்யும் நேரத்தை அதிகரிக்க வேண்டுமென காங்கிரஸô் வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட காங்கிரஸ் தலைவர் தி. புஷ்பராஜ் தமிழக முதல்வருக்கு அனுப்பிய மனு:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி, கறம்பக்குடி மற்றும் அறந்தாங்கி வட்டத்தில் ஒரு பகுதி ஆகியவை விவசாயத்தை மட்டுமே பிரதானத் தொழிலாக நம்பி ஆயிரக்கணக்கான விவசாயிகள் உள்ளனர்.

இந்நிலையில், விவசாயம், குடிநீர் ஆகிய தேவைகளுக்காக மோட்டார்களை மட்டுமே சார்ந்துள்ள நிலையில், அதற்கான மும்முனை மின்சாரம் உரிய முறையில் கிடைக்காத நிலை நீடிக்கிறது.

தேர்தல் அறிவிப்பு வெளியானவுடன் பகலில் ஒரு மணி நேரமும், இரவில் ஒரு மணி நேரமும் மும்முனை மின்சாரம் கிடைக்காத நிலை உருவானது. இதைத்தொடர்ந்து விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்தனர்.

இதையடுத்து, பகலில் 3 மணி நேரமும், இரவில் 3 மணி நேரமும் மின் விநியோகம் செய்யப்பட்டது. ஆனால், கடந்த 5 நாள்களாக (மே 15 முதல்) தினமும் ஒரு மணி நேரம் கூட மும்முனை மின் விநியோகம் செய்யப்படவில்லை. இதனால் விவசாயத்துக்கும், மக்களின் குடிநீர்த் தேவைக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே, தமிழக முதல்வர் இந்தப் பிரச்னையில் கவனம் செலுத்தி பகல், இரவு ஆகிய 2 வேளைகளிலும் தலா 5 மணி நேரம் மும்முனை மின் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ராஜபாளையத்தில் நாவல், பிளம்ஸ் பழங்கள் விற்பனை அதிகரிப்பு**

First Published : 23 May 2011 12:21:31 PM IST

ராஜபாளையம், மே 22: ராஜபாளையம் பகுதிக்கு நாவல் பழம், பிளம்ஸ் பழம் அதிக அளவில் விற்பனைக்கு வந்துள்ளன.

கொடைக்கானல் பகுதியில் தற்போது பிளம்ஸ் பழ சீசன் துவங்கியுள்ளது. இதைத் தொடர்ந்து ராஜபாளையம் சந்தைக்குப் பிளம்ஸ் பழங்கள் விற்பனைக்கு அதிக அளவில் வந்துள்ளன. ஒரு கிலோ பிளம்ஸ் பழம் ரூ.60க்கு விற்பனையாகிறது.

வைகாசி மாதத்தில் நாவல் பழ சீசன் துவங்கும். தற்போது மதுரையில் இருந்து நாவல் பழம் விற்பனைக்கு வரத் துவங்கியுள்ளது. ஒரு கிலோ பழம் ரூ.100க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இந்த இரு பழங்களுமே சீசன் காலத்தில் மட்டுமே கிடைக்கும். இதனால் பலரும் இப்பழங்களை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

இதேபோல் கேரளத்தில் இருந்து மஞ்சள்ரொபஸ்டா ரக வாழைப் பழம், நேந்திரம், செவ்வாழைப் பழங்களும் அதிக அளவில் விற்பனைக்கு வந்துள்ளன.

இந்த மாத ஆரம்பத்தில் ஒரு கிலோ மாதுளை பழம் ரூ.120 ஆக விற்றது. தற்போது விளைச்சல் அதிகரிப்பால் கிலோ ரூ.50 ஆகக் குறைந்துள்ளது.

கோடை வெயிலுக்குத் தற்போது பழங்களின் விற்பனை அதிகரித்துள்ளது.

**தலையங்கம்:விவசாயி வயிற்றில் பால்!**

First Published : 24 May 2011 04:07:27 AM IST

Last Updated : 24 May 2011 06:30:01 AM IST

காவிரி டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கு உயிர் நாடியாக விளங்கும் மேட்டூர் அணையிலிருந்து, இந்த ஆண்டு ஜூன் 6-ம் தேதியே குறுவை நெல் சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடுவது என முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான புதிய அமைச்சரவையின் அதிகாரப்பூர்வ முதல் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அரசின் இந்த முடிவை ஆளும் அதிமுக மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் விவசாய சங்கங்கள் மட்டுமல்லாது, கட்சி சார்பற்ற விவசாய சங்கங்களும் வரவேற்றுள்ளன.

குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12-ம் தேதி தண்ணீர் திறந்துவிடப்படுவது வழக்கம். அணையின் நீர் இருப்பு 90 அடிக்கு மேல் இருந்தால் மட்டுமே இது சாத்தியம். நீர் இருப்பு குறைவாக உள்ள காலங்களில் ஜூன் 12-ல் தண்ணீர் திறந்துவிடுவது

என்பது இயலாத விஷயமாகவே இருந்து வந்துள்ளது. பெரும்பாலும், விவசாயிகளின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகு ஜூலை இறுதியில்தான் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் நீர் இருப்பு இப்போது 113 அடிக்கும் அதிகமாக இருப்பதால், இந்த ஆண்டு ஜூன் 6-ம் தேதியே பாசனத்துக்குத் தண்ணீர் திறந்துவிடுவது என அதிமுக அரசு எடுத்துள்ள முடிவு வரவேற்கத்தக்கதே. நமது நாடு குடியரசான பிறகு, ஜூன் 12-ம் தேதிக்கு முன்னதாகவே மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் திறந்துவிடப்படுவது இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது.

ஜூன் மாதத்திலேயே பாசனத்துக்குத் தண்ணீர் கிடைத்தால்தான், குறுகிய கால குறுவை நெல் சாகுபடியை வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே முடித்து, பாதுகாப்பாக அறுவடை செய்ய முடியும் என்பது விவசாயிகளின் கருத்து. அவர்களின் இந்தக் கருத்துக்கு மதிப்பளிக்கும் வகையில், ஜெயலலிதா அரசின் இந்த முடிவு அமைந்துள்ளது. குறுவை சாகுபடி தாமதமாகத் தொடங்கப்படும் காலங்களில், அறுவடை நேரத்தில் பருவ மழையால் விவசாயிகளுக்குப் பேரிழப்பு ஏற்படுவதும், அதற்கு அரசு இழப்பீடு வழங்குவதும் தெரிந்ததுதான்.

ஆனால், குறுவையைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் சம்பா நெல் சாகுபடிக்கு ஜனவரி 28-ம் தேதி வரை தண்ணீர் திறந்துவிட்டாக வேண்டும். இதற்கு பருவமழையும், கர்நாடக அரசும் மனது வைத்தால்தான் முடியும். பலத்த மழை பெய்து, தனது மாநிலத்தில் உள்ள அணைகள் நிரம்பி வழியும் நிலையில்தான் உபரி நீரைத் தமிழகத்துக்குத் திறந்துவிடுவதை கர்நாடகம் வழக்கமாகக் கொண்டுள்ளது.

கடந்த 1991-ம் ஆண்டில் காவிரி நடுவர் மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பில், தமிழகத்துக்கு 205 டிஎம்சி தண்ணீர் திறந்துவிட வேண்டும் என கர்நாடகத்துக்கு உத்தரவிட்டது. அதன்பிறகு, 5-2-2007 அன்று தனது இறுதித் தீர்ப்பில், தமிழகத்துக்கு (புதுவைக்கும் சேர்த்து) 192 டிஎம்சி தண்ணீர் திறந்துவிட வேண்டும் என கர்நாடகத்துக்கு காவிரி நடுவர் மன்றம் உத்தரவிட்டது. ஆனால், இறுதித் தீர்ப்பின்படி, தமிழகத்துக்கு இந்தக் குறைந்த அளவு தண்ணீரைக்கூடத் திறந்துவிடாமல் கர்நாடக அரசு போக்கு காட்டி வருகிறது.

காவிரி உள்பட அனைத்து நதிநீர் பிரச்னைகளிலும் தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்ட உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என ஜெயலலிதா தனது தேர்தல் பிரசாரத்தின்போது குறிப்பிட்டார். எனவே, கர்நாடகத்திடமிருந்து உரிய தண்ணீரைப் பெறுவதற்கு உறுதியான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வார் என விவசாயிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

மேலும், ஜூன் 6-ம் தேதியே மேட்டூர் அணையைத் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளதால், காவிரி மற்றும் வெண்ணாறு பாசனப் பகுதிகளில் இப்போது மேற்கொள்ளப்பட்டுவரும் தடுப்பு அணைகள் கட்டுமானப் பணிகள், பழைய பாலங்களுக்குப் பதிலாகப் புதிய பாலங்கள் கட்டுதல், பழுதடைந்த நீரொழுங்கிகளை (ஷட்டர்) சீரமைத்தல் உள்ளிட்ட மராமத்துப் பணிகளை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

ஏனெனில், இந்தப் பணிகளை விரைந்து முடித்தால்தான், கடைமடைப் பகுதி உள்பட அனைத்து பாசனப் பகுதிகளுக்கும் முறையாகத் தண்ணீர் சென்று சேரும். எனவே, இதுவிஷயத்தில் அரசு உடனடிக் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

கேரளப் பத்திரிகைகளும், தொலைக்காட்சி சேனல்களும் இப்போதே முந்தைய இடது ஜனநாயக முன்னணி அரசின் நீர்வளத்துறை அமைச்சர் பிரேமசந்திரன் முன்வைத்த கொள்கைகளையும், வழிமுறைகளையும் புதிதாகப் பதவி ஏற்றிருக்கும் ஐக்கிய ஜனநாயக முன்னணி அரசும் முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னையில் தொடர வேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கி இருக்கின்றன. முல்லைப் பெரியாறு பிரச்னையில் சுமுகமான முடிவு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் கேரளத்தில் பலர் முனைப்போடு இருப்பதைத்தான் இது காட்டுகிறது.

ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அரசு, தொடக்கத்திலேயே கேரளத்தில் உம்மன் சாண்டி தலைமையில் அமைந்திருக்கும் அரசுடன் நல்லுறவையும், நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தி, முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னைக்கும் சுமுகமான முடிவை ஏற்படுத்துமேயானால், தென்மாவட்ட விவசாயிகளின் வயிற்றிலும் பால் வார்த்ததாக அமையும்.

விவசாயிகள் பிரச்னைக்கு முன்னுரிமை கொடுத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க முற்பட்டிருக்கும் தமிழக அரசுக்கு நமது வாழ்த்துகள்!

தினமலர்

**நடப்பு 2011-12ம் நிதியாண்டில்பொருளாதார வளர்ச்சி 8.8 சதவீதமாக இருக்கும்**

மே 24,2011,00:16




மும்பை:நடப்பு 2011-12ம் நிதியாண்டில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி , 8.8 சதவீதமாக இருக்கும் என, இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.நடப்பு நிதியாண்டில், வேளாண் மற்றும் அது சார்ந்த துறைகளின் வளர்ச்சி, 3.8 சதவீதமாக இருக்கும். இது, சென்ற 2010-11ம் நிதியாண்டில், 5.4 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.நடப்பு நிதியாண்டில், தொழில் துறை உற்பத்தி வளர்ச்சி 9.4 சதவீதமாகவும், சேவைத் துறை வளர்ச்சி 9.9 சதவீதமாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி, 3.7 சதவீதம் அதிகரித்து, 23.69 கோடி டன்னாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதில், நெல் மற்றும் கோதுமையின் பங்களிப்பு அதிகமாக இருக்கும். பன்னாட்டு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியம், நடப்பாண்டில், 14.7 சதவீதம் வரை அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.நடப்பு நிதியாண்டில், 8 லட்சம் கோடி ரூபாய் அளவிலான கட்டுமானத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது. இது, சென்ற 2010-11ம் நிதியாண்டில், 3.6 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.அதிகரித்து வரும் கச்சா எண்ணெய் விலை மற்றும் பணவீக்கம் ஆகியவை, பொருளாதார வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் என, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**கயிறு பொருள்கள் ஏற்றுமதிஇலக்கை விஞ்சி சாதனை**

மே 24,2011,00:19



புதுடில்லி:நாட்டின் கயிறு பொருள்கள் ஏற்றுமதி, சென்ற 2010-11ம் நிதியாண்டில், 807 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. 800 கோடி ரூபாய் மதிப்பிற்கு கயிறு பொருள்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், உலகின் பல்வேறு நாடுகளில், இந்திய கயிறு பொருள்களுக்கு தேவை அதிகரித்ததையடுத்து, இதன் ஏற்றுமதி சென்ற நிதியாண்டில், இலக்கை விஞ்சி சாதனை படைத்துள்ளது என, கயிறு வாரியம் தெரிவித்துள்ளது.

சென்ற நிதியாண்டில், சீனாவிற்கான இதன் ஏற்றுமதி அதிகரித்ததையடுத்து, ஒட்டுமொத்த கயிறு பொருள்கள் ஏற்றுமதி சிறப்பான அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. இருப்பினும், பல ஆண்டுகளாக, நம் நாட்டிற்கு, முக்கிய சந்தையாக திகழும் அமெரிக்காவிற்கான கயிறு பொருள்கள் ஏற்றுமதி, சென்ற நிதியாண்டில் குறைந்து போயுள்ளது.தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, சென்ற நிதியாண்டிலும், கயிறு பொருள்கள் ஏற்றுமதி, நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட அதிகரித்து வருகிறது.

கடந்த 2009-10ம் நிதியாண்டில், கயிறு பொருள்களுக்கான ஏற்றுமதி இலக்கு, 700 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவ்வாண்டில் இதன் ஏற்றுமதி, 804 கோடி ரூபாயாக உயர்ந்தது.தேங்காயிலிருந்து எடுக்கப்படும் நார்களிலிருந்து கயிறு, மிதியடிகள், தரை விரிப்புகள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

**வருமானம் கொழிக்கும் கொத்தமல்லி சாகுபடி**

பதிவு செய்த நாள் : மே 24,2011,02:41 IST

திருவள்ளூர் : எல்லா பருவத்துக்கும் ஏற்ற கொத்தமல்லியை பயிர் செய்து, குறுகிய காலத்தில், விவசாயிகள், அதிக வருமானம் பெறலாம் என திருவள்ளூர் தோட்டக் கலைத்துறை துணை இயக்குனர் ரஞ்சன்பால் தெரிவித்தார்.இதுகுறித்து அவர் கூறியதாவது: கொத்தமல்லியை வருடம்

முழுவதும் பயிர் செய்யலாம். ஒரு எக்டேர் நிலத்தில் பயிரிட்டால், ஒரு வருடத்திற்கு 80 ஆயிரம் ரூபாய் செலவாகும். ஒரு எக்டேருக்கு 5 முதல் 6 டன் வரை அறுவடை செய்யலாம். இரண்டு லட்சம் ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். விதைத்த 30 நாளில் அறுவடைக்கு வருவதால், குறுகிய கால பணப்பயிராக உள்ளது. இதை ஏக்கர் கணக்கில் ஒரே முறையாக பயிரிடாமல், 20 சென்ட் என பிரித்து 15 நாட்களுக்கு ஒரு முறை விதைத்தால், வருடம் முழுவதும் அறுவடை செய்யலாம். 400 கிராம் எடை கொண்ட ஒரு கட்டு கொத்தமல்லி தற்போது, 30 முதல் 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கொத்தமல்லியை பயிரிட்டு குறுகிய காலத்தில் விவசாயிகள் லாபம் பெறலாம். தொடர்புக்கு சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள உதவி தோட்டக்கலை அலுவலரை அணுகலாம். இவ்வாறு ரஞ்சன்பால் கூறினார்.

**பாரதீய கிசான் சங்கம் விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : மே 24,2011,00:22 IST

திருவெண்ணெய்நல்லூர் : திருவெண்ணெய்நல்லூரில் பாரதீய கிசான் சங்கம் சார்பில் பயிற்சி முகாம் நடந்தது. திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டார் கோவில் அறவுரை மண்டபத்தில் நடந்த முகாமிற்கு ஓய்வுபெற்ற வேளாண் இணை இயக்குனர் ராமமூர்த்தி தலைமை தாங்கினார். மாநில துணைத்தலைவர் பாண்டியன் முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் ரமேஷ்குமார் வரவேற்றார். இயற்கை விவசாயத்தை பரவலாக கொண்டு செல்வது குறித்தும், ரசாயன உரங்களால் ஏற்படும் தீமைகள் குறித்தும் அகில பாரத செயலாளர் மோகினி மோகன் மிஸ்ரா, மாநில அமைப்பாளர் கோபி, குமாரசாமி தம்பிரான், அம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் பேசினர். மாவட்ட செய்தி தொடர்பாளர் கல்யாண்குமார், கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,500 வழங்க விவசாயி நலச்சங்க தலைவர் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : மே 24,2011,02:25 IST

மோகனூர்: "கரும்பு டன் ஒன்றுக்கு, 2,500 ரூபாய் வழங்க வேண்டும்' என, விவசாயிகள் நலச்சங்க மாநிலத் தலைவர் பாலசுப்ரமணியன், தமிழக முதல்வருக்கு மனு அனுப்பி உள்ளார்.
அம்மனுவில் கூறியிருப்பதாவது: மேட்டூர் அணையில் இருந்து விவசாயத்துக்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறந்துவிடுவது வழக்கம். கடந்த சில ஆண்டுகளாக தண்ணீர் பற்றாக்குறை காரணமாக, காலம் தாழ்த்தி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. தாங்கள் முதல்வராக

பொறுப்பேற்றபின், மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்காக, ஜூன் 6ம் தேதி தண்ணீர் திறந்துவிடப்படும் என அறிவித்துள்ளது, விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதற்காக எங்களது நன்றியை தெரிவித்து கொள்கிறோம். தற்போது, தமிழகத்தில் வேளாண்துறை மூலம் வழக்கப்படும் கடன்கள் விவசாயிகளுக்கு காலதாமதமாக கிடைத்து வருகிறது. அதனால், அவர்கள் சாகுபடி செய்ய முடியாமல் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகின்றனர். விரைவில் கடன் கிடைக்க ஆவண செய்ய வேண்டும். மேலும், உரம், பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவற்றை தேவையான அளவு இருப்பு வைக்க, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். தாங்கள் தேர்தல் வாக்குறிதியில் தெரிவித்தபடி, கரும்பு டன் ஒன்றுக்கு, 2,500 ரூபாய் அளிக்கப்படும் என்பதையும், சொட்டுநீர் பாசனத்துக்கு முழு மானியத்தையும் அளித்தால் விவசாயிகளுக்கு பேருதவியாக இருக்கும்.
தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பு, வாழை, மரவள்ளி போன்றவற்றில் மாவுப்பூச்சி தாக்குதல் அதிகளவில் காணப்படுகிறது. அவற்றை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். கரும்பு வெட்டுக்கூலி அதிகரித்துள்ளதால், விவசாயிகளுக்கு குறைந்த அளவே வருவாய் கிடைக்கிறது.
அதனால், தமிழகத்துக்கு ஏற்றவாறு கரும்பு வெட்டும் இயந்திரங்களை தொழில் நுட்ப வல்லுனர்களை கொண்டு தயார் செய்து வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**உரம் விலை உயர்வால் விவசாயிகள் பாதிப்பு : கட்டுப்படுத்த பாசனதாரர்கள் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : மே 24,2011,02:14 IST

கோபிசெட்டிபாளையம்: கொடிவேரி அணை பாசனதாரர்கள் சங்க செயற்குழு கூட்டம் கோபியில் நடந்தது.
ஈரோடு, கரூர், திருப்பூர் மாவட்டத்தில் விவசாயம் மற்றும் குடிநீர் தேவையின் நீராதாரமாக உள்ள பாவனிசாகர் அணையில் பல ஆண்டாக படிந்துள்ள மண் மற்றும் சேறு, சகதிகளை அப்புறப்படுத்தி தூர்வாரததால் அணையின் நீர் கொள்ளளவு 10 சதவீதம் குறைந்துள்ளது. பவானிசாகர் அணையில் தேங்கி உள்ள சகதியை அப்புறப்படுத்த வேண்டும்.
மத்திய அரசின் கொள்கை மாற்றத்தால் விவசாயிகள் பயன்படுத்தி வரும் ரசாயன உரங்களின் விலையை திடீரென உற்பத்தியாளர்கள் உயர்த்தி வருகின்றனர். போதிய மழையின்றி முறையான நீர் நிர்வாகம், மின்தடை, ஆட்கள் பற்றாகுறை கட்டுபடியாத விலை போன்ற காரணங்களால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உர விலை உயர்வால் விவாயிகள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர். உரங்கள் விலை உயர்வை மத்திய, மாநில அரசு கட்டுப்படுத்த வேண்டும்

கொடிவேரி அணை பாசன திட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால் சீரமைப்பு நபார்டு திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருகரை பகுதிகளை அகலப்படுத்தியும், மண் கொட்டி முறையாக சீரமைக்க வேண்டும். பழைய காலங்களில் கரைகள் உடைந்து சேதம் ஏற்படும் நிலையை தவிர்க்க சீரமைப்பு பணிகளை முழுமையாக செயல்படுத்த வேண்டும். தலைவர் தங்கம் பழனிசாமி தலைமை வகித்தார். பொது செயலாளர் ராஜ வெங்கமேஸ்வரன், பொருளாளர் மாணிக்கம், துணைத் தலைவர் பிரதாபன், செயற்குழு உறுப்பினர்கள் வக்கீல் தளபதி உட்பட பலர் பங்கேற்றனர்.

**கோடை மழை: சந்தைக்கு மாடு வரத்து குறைவு**

பதிவு செய்த நாள் : மே 24,2011,02:14 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி மொடச்சூர் மாட்டு சந்தைக்கு மாடு வரத்து குறைந்தது. மாடுகள் 15 முதல் 25 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டது.

கோபி அருகே மொடச்சூரில் வாரந்தோறும் மாடு மற்றும் ஆட்டு சந்தை நடக்கிறது. சிறுவலூர், நம்பியூர், கடத்தூர், சத்தி, திங்களூர் போன்ற பகுதிகளில் இருந்து மாடு, ஆடுகள் அதிகளவில் கொண்டு வரப்படுகிறது. அக்னி வெயில் காரணமாக இரண்டு வாரங்களுக்கு முன் தீவன குறைவு ஏற்பட்டது. இதனால், மாடு விற்பனை சற்று அதிகரித்தது.

கோடைமழை பரவலாக பெய்ததால் மாடுகளுக்கான தீவனம் மீண்டும் கிடைத்துள்ளது. இதனால், மாட்டு சந்தைக்கு மாடு வரத்து குறைந்துள்ளது. கடந்த வாரத்தில் 900 மாடுகள் வரை விற்பனைக்கு வந்தது. நடப்பு வாரம் 400 மாடுகள் மட்டுமே விற்பனைக்கு வந்தது.

ஜெர்ஸி இன மாடுகள் 15 முதல் 20 ஆயிரம் ரூபாய் வரையும், கன்றுக்குட்டிகள் மூன்று முதல் ஏழாயிரம் ரூபாய் வரையும், கலப்பின பசுமாடுகள் 10 முதல் 20 ஆயிரம் ரூபாய் வரையும், கன்று குட்டிகள் மூன்று முதல் எட்டாயிரம் ரூபாய் வரையும் விற்கப்பட்டது. கொங்கன் இன பசுகள் 15 முதல் 20 ஆயிரம் ரூபாய் வரையும், கன்றுக் குட்டிகள் நான்கு முதல் எட்டாயிரம் ரூபாய் வரை விற்கப்பட்டது.

ஆடுகள் ஆயிரத்து 500 முதல் இரண்டாயிரத்து 500 ரூபாய் வரையும், இரண்டு குட்டியுடன் கூடிய ஆடுகள் மூன்று முதல் நான்காயிரம் ரூபாய்க்கும், குறுப்பின ஆடுகள் ஆயிரத்து 500 முதல் இரண்டாயிரம் ரூபாய்க்கும் விற்கப்பட்டது.

**என்டோசல்பான், லின்டேன் பூச்சி கொல்லி மருந்து நெல்லை மாவட்டத்தில் விற்பனை செய்ய திடீர் தடை**

பதிவு செய்த நாள் : மே 24,2011,01:31 IST

திருநெல்வேலி : என்டோசல்பான், லின்டேன் பூச்சி கொல்லி மருந்துகளை விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.
பயிர்களை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த என்டோசல்பான் என்ற பூச்சி கொல்லி மருந்து திரவம் மற்றும் தூள் வடிவத்தில் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லரை விற்பனையாளர்களால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. என்டோசல்பான் விற்பனைக்கு சுப்ரீம் கோர்ட் இடைக்கால தடை விதித்துள்ளது. இதனை தொடர்ந்து தமிழக அரசு வேளாண்மைத் துறை ஆணையரக ஆணையின்படி என்டோசல்பான் பூச்சி கொல்லி மருந்து உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.
எனவே, உற்பத்தியாளர்கள் என்டோசல்பான் பூச்சி கொல்லி மருந்துகளை உற்பத்தி செய்ய வேண்டாம். மீறி உற்பத்தி செய்தால் தயாரிப்பாளர் லைசென்ஸ் ரத்து செய்யப்படுவதுடன் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை மீறியதற்காக சட்ட பூர்வ நடவடிக்கையும் எடுக்கப்படும். நெல்லை மாவட்டத்தில் மொத்த மற்றும் சில்லரை பூச்சிகொல்லி மருந்து விற்பனையாளர்கள் தங்களிடமுள்ள பூச்சிகொல்லி மருந்துகளை விற்பனை செய்ய கூடாது. இதனை மீறினால் விற்பனையாளர் விற்பனை உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் அவர்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும். மறு உத்தரவு வரும் வரை என்டோசல்போன் பூச்சி கொல்லி மருந்துகளை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்துதல் கூடாது.
மேலும் லின்டேன் என்ற பூச்சிகொல்லி மருந்து உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் என்டோசல்பான் மற்றும் லின்டேன் பூச்சிகொல்லி மருந்துகளை பயிர் பாதுகாப்பு தேவைகளுக்கு பயன்படுத்த வேண்டாம் என்று கலெக்டர் ஜெயராமன் தெரிவித்தார்.

**மடத்துக்குளத்தில் கரும்பு அறுவடை பணி தீவிரம்**

பதிவு செய்த நாள் : மே 23,2011,23:53 IST

மடத்துக்குளம் : தேர்தல் திருவிழா முடிந்து பிற மாவட்ட ஆட்கள் பணிக்கு திரும்பியுள்ளதால் மடத்துக்குளம் பகுதியில் கரும்பு அறுவடை தீவிரமடைந்துள்ளது.

மடத்துக்குளம் அமராவதி பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகள் ஒப்பந்த அடிப்படையில் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பை வழங்குகின்றனர். பிற விவசாயிகள் சொந்தமாக ஆலை அமைத்து வெல்லம் உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கரும்பு அறுவடைக்கு ஆட்கள் பற்றாக்குறையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

குறித்த நேரத்தில் கரும்பு அறுவடை செய்ய முடியாத நிலையில் கரும்பின் பிழிதிறன்,வெல்லஅளவு, இனிப்பு சுவை உள்ளிட்ட சிறப்பம்சங்கள் பாதிக்கப்படும். இதனால், வெல்ல உற்பத்தியில் பாதிப்புஏற்பட்டு வந்தது.

ஆட்கள் பற்றாக்குறை குறித்த பிரச்னை பல ஆண்டுகள் தொடர்ந்ததையடுத்து குறித்த நேரத்தில் கரும்பு அறுவடை செய்ய மடத்துக்குளம் பகுதி விவசாயிகள் வெளிமாவட்ட ஆட்களை வரவழைக்க துவங்கினர். இந்த தொழிலாளர்கள் ஒரு சீசன் முடியும் வரை மடத்துக்குளம் பகுதியில் தங்கி பணிகளை மேற்கொண்டு வந்தனர். பணி முடிந்ததும் தங்கள் பகுதிக்கு சென்று வந்தனர். இந்தாண்டு கரும்பு அறுவடை சீசன் கடந்த மாதம் துவங்கியது. சேலம்,மதுரை மற்றும் இதர பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மடத்துக்குளம் பகுதிக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

உள்ளூர் தொழிலாளர்களும் கணிசமாக அறுவடை பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில், சட்டசபை தேர்தல் அறிவிக்கப்பட்டு பிரசாரம் சூடு பிடித்தவுடன் உள்ளூர் தொழிலாளர்கள் தேர்தலில் கவனம் செலுத்தி வந்தனர்.

தேர்தலில் பங்கேற்கவும் வாக்களிக்கவும் தொழிலாளர்கள் தங்கள் ஊர்களுக்கு சென்றதால் அறுவடை தருணம் முடிந்து கரும்பு காயும் நிலை ஏற்பட்டது. இதனால், விவசாயிகள் கடும் பாதிப்பிற்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டது.

ஓட்டு பதிவு முடிந்து முடிவுகள் வெளியானதையடுத்து மீண்டும் மடத்துக்குளம் பகுதிக்கு கரும்பு அறுவடை பணிக்கு பிற மாவட்ட தொழிலாளர்கள் திரும்பியுள்ளனர். உள்ளூர் தொழிலாளர்ளும் பணிக்கு திரும்பியுள்ளதால் கரும்பு அறுவடை தீவிரமடைந்துள்ளது. ஆலைகள் முழுவீச்சில் இயங்குவதோடு வெல்லம் மற்றும் சர்க்கரை உற்பத்தி சூடுபிடித்துள்ளது.

**இயற்கை வேளாண்மை கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : மே 23,2011,23:53 IST

நெகமம் : நெகமம் இயற்கையே வெல்லும் நலச்சங்கம் சார்பில் கோவை மாவட்டத்தில் 16 ஆயிரம் மரக்கன்று நட திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நெகமத்தில், "இயற்கையே வெல்லும் நலசங்கம்', "மகா விஷ்ணு அறக்கட்டளை' சார்பில் இயற்கை வேளாண்மை கருத்தரங்கு நடந்தது. இதில், நலச்சங்க தலைவர்கள் குணசேகரன், லோகநாத பிரபு ஆகியோர் பேசுகையில், "இயற்கை வேளாண்மையால், மண்ணின் தன்மையும், மனித சமுதாயத்தின் ஆரோக்கியத்தையும், சுற்றுப்புற சூழலையும், தலைமுறை வளத்தையும் முழுமையாக பாதுகாக்க முடியும். பூமி வெப்பமடைவதால், ஓசோன் படலத்தின் தன்மை மாறுவதாலும், அதன் தாக்கத்திலிருந்து பூமியிலிருந்து காக்க மரங்களை அதிகளவில் நட வேண்டும். இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த நலச்சங்கம் சார்பில் கோவை மாவட்டம் முழுவதும் 16 ஆயிரம் மரக்கன்றுகள் நட முடிவு செய்யப்பட்டுள்ளது. தென்னை மரத்தில், இயற்கை விவசாயம் செய்வதால் ஓர் ஆண்டுக்கு 150 தேங்காய் பெற முடியும், என்றனர்.

***செலவினங்கள் உயர்வதால் காய்கறி சாகுபடியில் ஆதாயம் குறைகிறது?***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

புதுடெல்லி
சரக்குப் போக்குவரத்துக்கான செலவினம் உயர்ந்து வருவது, சேமிக்கும் வசதி மற்றும் குளிர்பதன கிடங்கு வசதிகள் இல்லாதது போன்றவற்றால் காய்கறி சாகுபடியில் ஆதாயம் குறையும் நிலை ஏற்பட்டுள்ளதாக இத்துறையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச அளவில் காய்கறி உற்பத்தியில் சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. காலிஃபிளவர் உற்பத்தியில் முதலிடத்திலும், வெங்காயம் உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும், முட்டைக்கோசு உற்பத்தியில் மூன்றாவது இடத்திலும் இந்தியா உள்ளது. நம் நாட்டில் மொத்தம் 63 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது. இதன் வாயிலாக 9.30 கோடி டன் காய்கறி விளைகிறது.

இந்தியாவில் தினமும் ரூ.275 கோடிக்கு காய்கறி மற்றும் பழங்கள் விற்பனையாகி வருகின்றன. அதே சமயம் நாட்டில் நாள் ஒன்றுக்கு வீணாகும் காய்கறி, பழங்களின் மதிப்பு ரூ.130 கோடி என்ற அதிர்ச்சி தகவலும் வெளியாகி உள்ளது. சர்வதேச அளவில் காய்கறி உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு 15 சதவீதமாக உள்ளது. எனினும் ஏற்றுமதியில் நமது பங்கு 1.5 சதவீதம் என்ற அளவில் மிக குறைவாக உள்ளது. வீணாகும் அளவு அதிகமாக இருப்பதும் இதற்கு ஒரு மறைமுக காரணமாகும். எனவே காய்கறி உற்பத்தி துறையில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

தினகரன்

**வர்த்தகம் களைகட்டாததால் தேயிலைதூள் தேக்கம்**

பதிவு செய்த நாள் 5/24/2011 6:13:40 AM



குன்னூர் : உள்நாட்டு, வெளி நாட்டு வர்த்தகமும் களை கட்டாததால் குன்னூர் சிடிடிஏ ஏல மையத்தில் 22 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. நீலகிரி மாவட்டம் குன்னூர் சிடிடிஏ (தனியார்) ஏல மையத்தில் 20வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளிகிழமைகளில் நடைபெற்றது. மொத்தம் 15.12 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 10.76 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.36 லட்சம் கிலோவும் அடங்கும். பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாடுகளை சேர்ந்த வர்த்தகர்கள் குறைந்த அளவிலான தேயிலை தூளை கொள்முதல் செய்தனர்.

உள்நாட்டு வர்த்தகமும் களை கட்டவில்லை. இதனால் 22 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. அனைத்து ரகத்திற்கும் கிலோவிற்கு ரூ.3 வரை விலை சரிந்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோவு ரூ.40 முதல் ரூ.43 வரையிலும், உயர் வகை ரூ.80 முதல் ரூ.130 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.44 முதல் ரூ.47 வரையிலும், உயர் வகை ரூ.85 முதல் ரூ.130 வரையிலும் விலை கிடைத்தது.

## முட்டை விலை உயர்வு

பதிவு செய்த நாள் 5/24/2011 6:13:13 AM



நாமக்கல் : நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் பண்ணையாளர், வியாபாரிகள் கலந்து கொண்டு ஆலோசித்தனர். இதில் முட்டை விலையில் 3 காசுகள் உயர்த்தப்பட்டு ஒரு முட்டை விலை 223 காசுகளாக விலை நிர்ணயம் செய்யப்பட்டது. பிற மண்டலங்களில் முட்டை விலை உயர்ந்துள்ளதால் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர் தெரிவித்தனர்.

ஒரு கிலோ முட்டைகோழி ரூ.38 ஆகவும், ஒரு கிலோ கறிகோழி ரூ.57 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. பிற மண்டலங்களில் நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை (பைசாவில்) சென்னை & 228, பெங்களூரு & 210, மைசூர் & 213, ஹைதராபாத் & 187, மும்பை & 212, விஜயவாடா & 192, பர்வாலா & 194, டெல்லி & 205 காசுகள்.